சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திருச்சிராப்பள்ளி செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு நேற்று (3.9.2025) சென்னை விமான நிலையத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பூங்கொத்து வழங்கி வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வின் போது ஆளுநர் ஆர்.என்.ரவி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டத்தின் தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், நேற்று (03/09/2025) துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து, நவம்பர் 1, 2 தேதிகளில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெறவிருக்கும், சர்வதேச மனிதநேய மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். அவருடைய மனைவி இராணி மகிழ்நன், திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, ஸ்விட்சர்லாந்தில் இருந்து வந்திருந்த ஈழத் தமிழர்கள் தமயந்தி, லவசீலன் ஆகியோரும் துணை முதல்வரை சந்தித்தனர்.

தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றம்: தமிழ்நாட்டில்

இந்தியாவிற்கே முன்னோடியாக செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் - சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப்.4 –

தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டது குறித்தும், இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், "சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறிய 505 வாக்குறுதிகளில், நமது திராவிட மாடல் அரசு 364 வாக்குறுதிகளை நிறைவேற்றி, 40 வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளதைத் தக்க தரவுகளோடு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு , எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் கோவி.செழியன் ஆகியோர் விளக்கியுள்ளனர்.

இன்னும் ஒருபடி மேலே சொன்னால், முதல மைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற இந்தியாவுக்கே முன்னோடியாகச் செயல்படுத்தப் படும் முத்திரைத் திட்டங்கள் - தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படாதவை.

முந்தைய ஆட்சியின் பத்தாண்டுகால நிதி நிர்வாகச் சீர்கேடு, கொரோனா நெருக்கடி, தமிழ்நாட்டை வெல்ல முடியாத ஒன்றிய பா.ஜ.க. வன்ம அரசின் ஓரவஞ்சனை போன்ற தடைகளைக் கடந்து, சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளோம்!

எளிதில் அணுகும் தன்மை (Accessibility), பதில் கூறும் பண்பு (Accountability), வெளிப்படைத் தன்மை (Transparency), அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகம், (Inclusivity), பொறுப்புணர்வு (Responsibility), நீடித்து நிலைக்கும் தன்மை (Sustainability) இதுதான் தி.மு.க.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க வரி விதிப்பால் திருப்பூர் தவிக்கிறது!

டிரம்பிடம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்டு 'விஸ்வகுரு' எனும் தங்கள் பட்டப்பெயருக்கு நியாயம் செய்யுங்கள்!

பிரதமர் மோடிக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப்.4-

அமெரிக்க அதிபர் அறிவித்துள்ள வரி விதிப்பினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பிரதமர் மோடிக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலியுறுத்தல் குறித்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கண்டன ஆர்ப்பாட்டம் மாபெரும் வெற்றி!

மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே!

தாங்கள் ஆதரித்த ட்ரம்ப் அவர்கள் விதித்துள்ள #USTariff காரணமாக, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், இந்தியாவின் பல மாநிலத் தொழிலாளர்களுக்கும்

வாழ்வளிக்கும் #DollarCity திருப்பூர் தவிக்கிறது.

குஜராத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் இரஷ்ய கச்சா எண்ணெய் கிடைப்பதற்காக, பல ஆயிரம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் எங்கள் ஏற்றுமதியாளர்களை நீங்கள் பரிதவிக்க விடுவது எந்த விதத்தில் நியாயம்?

நான் ஏற்கெனவே, கடிதத்தில் கூறிய நிவாரணங்களை உடனடியாக அறிவித்து, ஆவன செய்யுங்கள்! அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்தி, தீர்வுகண்டு, #VishwaGuru எனும் தங்கள் பட்டப் பெயருக்கு நியாயம் செய்யுங்கள்!

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து உணர்வுகளைப் பதிவுசெய்த அனைத்துக்கட்சி தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டு

காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் மாணவ - மாணவிகளுக்கு ஆறுதல்!

அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்!

திருவண்ணாமலை,செப்.4- பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு விபத்து ஏற்பட்டு காயம் அடைந்த பள்ளி மாணவ மாணவிகளை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார் .

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (02.09. 2025) திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டதில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் தானியார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ - மாணவிகளை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்து சத்தான உணவுப் பொருட்கள் மற்றும் பழங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது;

ஜவ்வாதுமலைப் பகுதியில் உள்ள தானியார் கிராமத்தில் அரசு நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவ - மாணவிகள் படித்து வருகின்றனர். மாணவ - மாணவிகளின் நலன் கருதி பள்ளி சார்பில் தனியார் பஸ் ஏற்பாடு செய்யப்பட்டு தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் அழைத்து செல்லப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் பள்ளிக்கு 40 குழந்தைகளுடன் சென்ற பேருந்து திடீரென்று ஐந்து அடி பாலத்தில் கவிழ்ந்தது. அதன் விவரம் தெரிந்து விரைவாக வந்த மீட்பு குழுவினர் குழந்தைகளின் மீட்டு அரசு மருத்துவ மனையில் அனுமதித்தனர்.

மேலும் காயமடைந்த 18 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 14 குழந்தைகளை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். மீதம் 4 குழந்தைகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும் சிறப்பு மருத்துவர் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு தினங்களில் அனைவரும் வீட்டுக்கு நலமுடன் செல்வார்கள் என்று தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை மாநகராட்சி துணை மேயர் ராஜாங்கம், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (02.09.2025) திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டதில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் தானியார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்து சத்தான உணவுப் பொருட்கள் மற்றும் பழங்களை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தூத்துக்குடி இளைஞர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட 'புத்தொழில் களம்' திட்டத்தின் ஆதரவுடன் Deep Cycle Hub ஸ்டார்ட்அப் நிறுவனம் உருவாக்கியுள்ள 'சூழல் சிங்கம்' எனும் EWaste குறித்தான இணையதளத்தை சுப்பையா வித்யாலயம் மகளிர் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, Deep Cycle Hub நிறுவனர்கள் தீப்தி கேசரினோ மற்றும் ஜோசப் கேசரினோ ஆகியோர் பங்கேற்றனர்.